உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் வரும் அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சியினை என்றும் உயிரோவியமாக வீடியோ படம்பிடித்திட நாடுங்கள்!
ஸ்ரார்
வீடியோ கொம்பிளெக்ஸ்
ராஜ்-கொற் தபால்கந்தோரடி கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்

# உதயன்

விலை ரூ 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

STAR VIDEO COMPLEX
Any Functions at your Home? Remember this name for VIDEO RECORDING
'RAJ-COT' NEAR POST OFFICE KONDAVIL EAST, KONDAVIL

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு கார்த்திகை மீ 12 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 14 (27-11-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 1

### வடக்கும், கிழக்கும் இணைந்த

# மாநில சுயாட்சியையே இந்தியா வலியுறுத்தும்

## உதய வேளையில் உங்களுடன்-----

அன்புசால் பெருமக்களே!

வணக்கமும் நல்வாழ்த்துக்களும்.

உங்கள் கைகளில் தவழ்பவன் உதயன். அவன் இன்று காலை உதித்து எழுந்தவன். புதினம் சொல்ல வரும் புதியவன். ஆம் உங்கள் எல்லோருக்கும் புதியவன். ஆயினும் உங்கள் பால் அன்பு கொண்டவன். தமிழ் மக்களாகிய தங்களுக்குப் பணி செய்வதற்கென்றே யாழ்ப்பாண உந்தியில் உதித்தவன். உங்கள் நல்வாழ்வும் இன்பமும் தான் அவனது நீண்ட நெடு நோக்கும் இலட்சியமும்.

அரசியல், பொருளாதார சுதந்திரம் மலர வேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்க வேண்டும். ஈழம் வாழ் தமிழ் மக்கள் உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு நிகராக உயர வேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவ வேண்டும்.

எங்களிடம் உள்ள கல்வி, மனித சக்தி முதலாம் பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்த வேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும். எமது வருங்காலச் சந்ததிச் செல்வங்கள் வேலைவாய்ப்புக்கும் ஜீவனத்துக்கும் கொழும்பையும் பிறநாட்டுத் தலைநகரங்களையும் நாடாதிருக்கச் செய்ய வேண்டும். தமிழர் தமது பிறந்த மண்ணில் [illegible] டனும் முதலாந்தர பிரஜைகளாக வாழவேண்டும். தம்மைத் தாமே ஆண்டு தமது பணிகளைத் தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும்.

இதுவே உதயனின் ஆசையும் அபிலாஷையும். தமிழ்ப் பெருமக்கள் இதனை ஈட்டுவதற்காக உதயன் தன்னை அர்ப்பணம் செய்வான். அந்த அர்ப்பணமே அவனது உதயநாள் சங்கற்பம்.

ஈழத் தமிழர் வாழ்வில் இருள் கவிந்துள்ளது. அந்த இருள் நீங்கி ஒளி பரவ வேண்டும். பூவுலகில் இருள் நீக்கி ஒளி தருபவன் உதயன். அதே போல், தமிழர் வாழ்வில் ஒளி பரவிப் பிரகாசிக்க இந்த உதயன் பல்லாற்றானும் உழைப்பான்.

அநீதியின் தலையில் எழுத்தடி கொடுக்கவும், அக்கிரமத்திற்கு எதிராக ஆர்த்தெழவும், கருத்தைத் திரட்டி வழிப்படுத்தவும், ஒடுக்கப்படுவோருக்காகக் குரல் கொடுக்கவும் அவன் ஒரு போதும் பின்னிற்கப் போவதில்லை.

போலி வேடம் போட அவனுக்குத் தெரியாது. உள்ளதை உள்ளவாறே கூறி உண்மையை நிலைநாட்ட அவன் உழைப்பான்.

'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதை அவன் அறிவான்.

பத்திரிகைக்கு உள்ள மகாசக்தியை உணர்ந்தவன். அதனை நேர்வழியில் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் ஆற்றுப்படுத்த வேண்டியதன் அவசியமும் அவனுக்குப் புரியும். தமிழ் மக்கள் சகலரும் அவனது தோழர்கள். எதிரிகள் எவரையும் அவன் தேடிக் கொள்ள விரும்பவில்லை. நடுநிலைமை அவன் நல்வழியாக இருக்கும்.

உதயன் உன்னி எழுந்து உயர்ந்து வளர்வதற்கு உங்கள் எல்லாவித நல்லாதரவையும் நாடி நிற்கிறோம்.

உதயனுக்கு உங்கள் இதயக் கமலங்களில் இடம் தாருங்கள்.

உதயன் பால் தமிழர் உள்ளம் எல்லாம் பொங்குக. தமிழ் மண் எங்கும் மங்களம் தங்குக- என்று இறையருளை இறைஞ்சுகின்றோம்.

- பிரசுர முகாமைப் பீடம்

## டாக்கா உச்சிச் சந்திப்பில் கடும்போக்கை கடைப்பிடிக்க வெளியுறவு பிரிவு தயாராகிறது

புதுடில்லி, நவ. 26

இலங்கை இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வாக, வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சித் திட்டத்தையே இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. டாக்கா உச்சிச் சந்திப்பில் அதையே பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த இருக்கிறார்.

அந்தத் திட்டத்தை இலங்கை அரசை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் கடுமையான போக்கை இந்தியா கடைப்பிடிக்கும். வெளி விவகார அமைச்சு அதற்குத் தயாராவதாகத் தெரிய வருகிறது.

காணிக் குடியேற்றம், சட்டம்-ஒழுங்கு பேணல் ஆகிய அதிகாரங்கள் கொண்ட வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சிதான் இலங்கை இனப்பிரச்சினைக்குச் 'சரியான தீர்வு என்பதை இந்தியா அக்டோபர் மாத ஆரம்பத்தில் இந்திய அரசுக்கும் தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும், கூட்டணித் தலைவர்களுக்கும் இடையே நடந்த சந்திப்பின்போது ஏற்றுக் கொண்டுவிட்டது.

### இந்திரா காலத்தில்

திருமதி இந்திரா காந்தி பதவியில் இருந்த காலத்தில் வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சித் திட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து வந்தார். அவரின் சிறப்புப் பிரதிநிதியான திரு. ஜி. பார்த்தசாரதியும் இந்த அடிப்படையிலேயே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார்.

திருமதி இந்திரா காந்தியின் மறைவைத் தொடர்ந்து திரு. ராஜீவ் காந்தி பதவி ஏற்றார்.

### பண்டாரியின் பின்னர்

அதன்பின்னர் வெளியுறவுச் செயலாளர் திரு. ரோமேஷ் பண்டாரி, மாகாண சபைத் திட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்தார்.

விடுதலைப் போராளிகளின் பிரதிநிதிகள் நாடு கடத்தப் பட்டமையைத் தொடர்ந்து தமிழகத்தில் பதற்ற நிலை உருவானது. அதன்பின்னர் ஏற்பட்ட புதிய சூழ்நிலையில் இந்திய அரசுக்கும் தமிழ் அமைப்புக்களுக்கும் இடையே நடந்த அக்டோபர் பேச்சுக்களில் தான் முதன் முறையாக வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சித் திட்டத்தை ஏற்கும் புதிய திருப்பம் உண்டானது.

இச்சுயாட்சித் திட்டத்தையே பஹாமாஸில் ஜே. ஆரிடம் ராஜீவ் காந்தி வலியுறுத்தினார்.

இதற்குக் குறைந்த எதுவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய மாட்டாது என்று மீண்டும் (டிச. 7, 8ஆம் திகதிகளில்) டாக்காவில் வைத்து திரு. ராஜீவ் காந்தி, திரு. ஜெயவர்த்தனவிடம் வலியுறுத்த இருக்கின்றார் என்று தெரியவந்துள்ளது.

இது விஷயத்தில் இந்தியா தீவிர அணுகுமுறையைக் கடைப்பிடிக்க இருப்பதாகத் தெரிகின்றது.

இதற்கு முன்னோடியாக இந்திய வெளியுறவு அமைச்சில் இலங்கைப் பிரிவுக்குத் தலைமை வகித்த திருமதி மீரா சங்கர் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## உதயனும் இலச்சினையும்

நாளின் நாயகன் சூரியன். பூலோகத்தின் புருஷனும் அவனே. இங்குள்ள உயிர்கள் யாவும் வாழ்வதற்கும், வளமும் நலமும் பெறுவதற்கும் ஆதார சுருதியாக இருப்பவன் இரவிதான். பயங்கரமான இருள் படிந்த இரவைக் கலைத்து ஒளி தந்து உலகை உய்விக்க உதித்து எழும்போது பகலவனை சூரியன், உதயனாகின்றான்.

ஆதியிலே, தமிழ் மக்கள் முதன் முதலில் சூரியனைத்தான் தமது கடவுளாகக் கொண்டு வணங்

(4-ம் பக்கம் பார்க்க)





### அமரர் க. சண்முகம்

அவர் பிறந்தது இந்த மண்.

இந்த மண் சீர்பெற்றுச் சிறப்புற்று இங்கு வாழும் தமிழ் மாந்தர் எல்லாம் வளமுற்று நலமுற்று வாழவேண்டும்.

இந்த மண்ணின் வளங்களும், இங்குள்ள வாய்ப்புகளும் கண்டறியப்பட வேண்டும்.

அதற்கென இந்த மண்ணின் சிந்தனைச் சிற்பிகள், செயல் வீரர்கள் மற்றும் பெரு மக்களின் கருத்துக் கருவூலங்களை அரங்கேற்றத் துணை புரிய வேண்டும்.

இதுவே அவரது சிந்தனையாக இருந்தது.

அதற்கு உகந்த சாதனம் பத்திரிகையே என உணர்ந்தார்.

தமிழ் மண்ணில் பத்திரிகை ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற ஆர்வம், போதாகி, மலராகி, காயாகிப் பழமாகி கனிந்து இலட்சியமானது.

அவரது இலட்சிய வித்து, வேரூன்றித் தலைத்து உதயன் - சஞ்சீவியாக இன்று அவரது சொந்த மண்ணிலேயே முளைவிடுகிறது.

அவரது இலட்சிய இலக்கை அடைவதற்கு எமது சகல விதமான சக்தியையும் அர்ப்பணிக்கிறோம்.

-இயக்குநர் சபை

## சமயத் தலைவர்களின் ஆசி

**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் வாழ்த்து:**

ஷப்ரு நிறுவனத்தார் 'உதயன்' என்ற நாளிதழ் ஒன்றினை வெளியிட இருப்பதறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்னோரன்ன வெளியீடுகள் வாயிலாக சைவமும் தமிழும் வளர வழிவகைகள் தோன்றும்.

எனினும் காலத்துக்கேற்ப கட்டுரைகள், கவிதைகள், கதைகள், விளம்பரங்கள் ஆதியன இடம்பெறினும் ஆணித்தரமான நோக்கு, தெய்வ நம்பிக்கை, தெய்வ உணர்வு இவைகளை ஊக்குமுகமாக அமையவேண்டும்.

ஆசிரியருக்கும், ஷப்ரு நிறுவனத்தாருக்கும் எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

**தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீனப் பேராயர் வண. பிதா டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் வாழ்த்து:**

'உதயன்' என்னும் ஓர் புதிய நாளாந்த வெளியீடும், 'சஞ்சீவி' என்னும் ஓர் புதிய வாராந்த வெளியீடும் பிரசுரிக்கப்பட இருப்பதை மனமார வரவேற்கிறோம்.

பத்திரிகைகள் சமூகத்தின் மனசாட்சிக் கோல்கள் ஆகவும், சமூகத்தின் வளர்ச்சி முன்னேற்றத்திற்காகவும் உழைக்கும் கருவிகளாகவும் விளங்க முடியும்.

இப்புதிய வெளியீடுகள் புதினங்களை உண்மையாய்க் கூறி, கொள்கைகளையும் எண்ணங்களையும் நேர்மையான முறையில் எடுத்துரைக்க வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோள்.

இலங்கைத் தமிழ் மக்களின் கல்வி, கலாசாரம், பண்பு, சமூக நீதி யாவற்றையும் வளர்க்க இவ்வெளியீடுகளின் பிரசுரம் இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவதாக.

**யாழ். ஜம் ஈயதுல் உலமா சபையைச் சேர்ந்த மௌலவி அப்துல் ரசாக் ஜமால் அவர்களின் வாழ்த்து:**

தமிழ் நாளிதழ்கள் குறைவாக வெளிவரும் யாழ்நகரில் 'உதயன்' நாளிதழ் வெளியிடப்படுவது அக்குறையை நிறைவு செய்யும் என்று நம்புகின்றேன்.

பெருநகராக வளர்ச்சி அடையும் யாழ்நகருக்கு, அதன் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப பத்திரிகைகளும் பெருக வேண்டியுள்ளது.

அந்நிலைமையில் உங்கள் பத்திரிகை நல்ல வாய்ப்பை உருவாக்கும் என நம்புகின்றேன். அரிய செய்திகளை வழங்குவதிலும் சமயம், இலக்கியம், மற்றும் துறை கலை அறிவை ஊட்டுவதிலும் உங்கள் பத்திரிகை உன்னத பணியை ஆற்ற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

'உதயன்' புதிய சகாப்தம் உருவாக உதவட்டும்.

## வந்தனன் உதயன், வந்தனன்!

இரவின் இருளைக் கலைத்து, உலகில் ஒளி வெள்ளம் பரப்ப உதயன் எழு பரிதிகளில் ஏறி உதித்து வரும் காட்சி. வி. கே. என்ற இரு எழுத்துக்களில் மறைந்திருக்கும் முதுபெரும் ஓவியர் திரு. வி. கனகலிங்கத்தின் கைவண்ணத்தில் பிறந்தது இந்தச் சித்திரம்.

## சீனி! சீனி!!

யாழ்ப்பாணம், நவ. 27

ஆயிரம் தொன் சீனி நேற்று கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தது.

காங்கேசன் துறைமுகத்தில் சீனிஇறக்குமதி செய்யப்படுகின்றது.

டிசம்பர் 2-ம் திகதியும் 2,000 மெட்ரிக் தொன் சீனி கப்பல்மூலம் காங்கேசன் துறைமுகம் வந்து சேரும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

## உதயனின் வாரஇதழ் சஞ்சீவி

### முச்சந்தி முரளி



அச்சா! யாழ்ப்பாணத்திலிருந்து மூன்றாவது பத்திரிகை. நல்ல முழிப்பாய் இருக்கு.

எங்கடை பகுதியிலேயே எல்லாத்தையும் செய்யலாம் என்பதற்கு இது முன்மாதிரி தானப்பா!

## சுபநேரம்

27-11-1985

சுபநேரம்:

4. 34 முதல் 6. 13 வரை

ராகுகாலம்:

12. 13 முதல் 1. 43 வரை

பூரணை விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## "நம்பர் வண்" நடிகை ஸ்ரீ தேவி ஆபாசமாக நடிக்க மறுக்கிறார்!

ஹிந்திப் படவுலகில் இன்று கொடிகட்டிப் பறக்கிறார் ஸ்ரீதேவி. முன்னணி நடிகைகளான ஹேமமாலினி, ரேகா போன்றவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு "நம்பர் வண்" நடிகையாக ஜொலிக்கிறார் இவர்.



ஸ்ரீ தேவி ஹிந்தியில் கடைசியாக நடித்து வெளி வந்த படம் "மாஸ்டர்ஜி." அதில் படு ஆபாசமாக இவர் நடித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து படவுலகில் இவரது நடிப்புப்பற்றி பலவாறாக விமர்சிக்கப்பட்டது.

இதுபற்றி நடிகை ஸ்ரீ தேவி கூறியதாவது:.

"நடிகை என்ற வகையில் எனது நடிப்பு நன்றாக இருந்ததாகவே எனக்குத் தெரிகிறது. ஆனால் மற்றவர்கள் "படு ஆபாசமான" நடிப்பு என்று விமர்சிக்கத் தொடங்கி விட்டார்கள்.

"என்னவோ, படம் எடுத்தாகிவிட்டது. இனிமேல் இப்படி படு கவர்ச்சியாக உடலழகைக் காட்டும்படி படங்களில் நடிக்க மாட்டேன் "என்றார் அவர்.

இது இதுவாறிருக்க, ஸ்ரீ தேவி ஹிந்தி நடிகர் மிதுன் சக்கரவர்த்தியைத் திருமணம் செய்து கொண்டு, நடிப்பதையே விட்டுவிடப் போவதாகவும் கதை அடிபடுகிறது.

இச்செய்தி படவுலகையே பெரும் பரபரப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்தத் திருமணம் இந்த ஆண்டு இறுதியில் நிகழும் என்றும் கூறப்படுகிறது.

### சுஜாதாவின் கணவர் ஜெயகர் பலே கில்லாடி

"மரோ சரித்திரா", "அவள் ஒரு தொடர் கதை" போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் இராம. அரங்கண்ணல்.

நீண்ட இடைவெளிக்குப்பின் "ஸ்வாதி" தெலுங்குப் படத்தை தமிழிலும், மலையாளத்திலும் எடுக்கத் திட்டமிட்டார். தன்னால் அறிமுகப்படுத்தப்பட்ட சுஜாதாவை இப்படத்திற்கும் தெரிவு செய்தார்.

சுஜாதாவின் கணவர் ஜெயகரிடம் எல்லா விஷயங்கள் பற்றியும் அரங்கண்ணல் பேசினார். யாரிடம் படம் விலைக்கு வாங்கப்பட்டது என்பதையும் கூடத் தெரிவித்துவிட்டார்.

சுஜாதாவிடம் கலந்து பேசி முடிவு சொல்வதாகக் கூறிச் சென்ற அந்த வியாபாரி தன் திறமையைக் காட்டிவிட்டார்.

படத்தை விற்றவர்களைச் சந்தித்து, "நாங்களே அந்தப் படத்தை எடுக்கிறோம்" என்று கூறி, அரங்கண்ணல் பேசிய தொகையிலும் கூடிய தொகை தருவதாகக் கூறி விஷயத்தை முடித்துவிட்டாராம்.

தினசரி சினிமா

"படத்தை விற்றவர்கள் கூட மோசடி செய்து விட்டார்களே" என்று மிகவும் வருந்துகிறார் தயாரிப்பாளர் இராம. அரங்கண்ணல்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிட்டது.

# விமானக் கடத்தலுக்கு லிபியாவே காரணம்

## எகிப்து குற்றச்சாட்டு எல்லையில் படை உஷார் நிலை

கெய்ரோ, நவ 26

"எகிப்திய விமானக் கடத்தலுக்கு லிபியாவே காரணம் இவ்வாறு எகிப்திய வானொலி குற்றஞ்சாட்டியது.

அத்துடன் லிபியாவுடனான தனது எல்லைப்பகுதியில் எகிப்து அவசரகால நிலையைப் பிரகடனம் செய்துள்ளது. எகிப்திய படைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

மோல்டாவுக்கு கடத்தப்பட்ட எகிப்திய விமானம் எகிப்திய கமாண்டோக்களின் திடீர் தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து எகிப்து மேற்கண்ட குற்றச்சாட்டை விடுத்தது.

எகிப்திய கமாண்டோக்கள் கடத்தல் விமானத்தில் திடீர் தாக்குதல் நடத்தியபோது விமானத்தில் இருந்த 60 பேர் கொல்லப்பட்டனர்.

கமாண்டோக்கள் இரு போர் விமானங்களில் வந்து திடீர் என தாக்குதலை நடத்தினர்.

அவர்கள் கடத்தல் விமானத்தின் இரு கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தபோது கடத்தல்காரர்கள் விமானத்துக்குள் குண்டுகளை வெடிக்க வைத்தனர். அப்பொழுதே மேற்கண்ட 60 பேரும் கொல்லப்பட்டனர்.

கடத்தல் விமானம் மீது எகிப்திய கமாண்டோக்கள் நடத்திய தாக்குதலை அமெரிக்காவும் பிரிட்டனும் வரவேற்றுள்ளன. லிபியா கண்டித்துள்ளது.

கண்மூடித்தனமான தாக்குதலை மோல்டா நியாயப்படுத்த முயல்வதாக லிபியா தெரிவித்தது.

கடத்தப்பட்ட விமானத்தில் 86 பயணிகள் இருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் எகிப்தியர், கிரேக்கர், பிலிப்பீன்ஸ்காரர்கள் ஆவர்.

ஏதென்ஸில் இருந்து கெய்ரோ சென்றுகொண்டிருந்த சமயம் இந்த விமானம் கடத்தப்பட்டது.

விமானத்தைக் கடத்திய இயக்கம் எகிப்திய புரட்சி ஸ்தாபனம் என்று தெரிவிக்கப்பட்டது. மூவர் மட்டுமே இதனைக் கடத்தி இருந்தனர்.

கடத்தல் விமானம் எகிப்திய கமாண்டோக்களின் தாக்குதலுக்கு உள்ளாவதற்கு முன்னர் மோல்டா பிரதமர், மோல்டா வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

அப்படியிருந்தும் கடத்தல்காரர்கள் நேரம் குறிப்பிட்டு ஒவ்வொருவராக பலரை சுட்டுக் கொன்றிருந்தனர். அவ்வாறு இறந்தவர்களில் ஒருவர் அப்பொழுது விமானப் பயணிகளில் ஒருவராக இருந்த எகிப்திய பாதுகாப்பு அமைச்சரும் ஆவார்.

ஈழ மண்ணில் வீறு நடையுடன் உதயனின் குரல் ஒலிக்க
வாழ்த்துகிறோம்!
வசீகரன் ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

## வெளி உலகில்

ஆப்கன் பிரச்சினை:

### சுமையை இறக்கும் பொறுப்பு மாஸ்கோவிடம் உள்ளது - ஸியா

குவைத், நவ. 26

ஆப்கானிஸ்தான் பிரச்சினை பாகிஸ்தானுக்கு ஒரு சுமை. ஆனால் அச்சுமையை இறக்கி வைக்கும் பொறுப்பு மாஸ்கோவிடம்தான் உள்ளது.

இப்படி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் தெரிவித்தார்.

30 லட்சம் ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானில் தங்கி உள்ளனர். இவர்களை ஆதரிக்க தினம் 10 லட்சம் டாலர்களை நாம் செலவழிக்க வேண்டியுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆப்கன் கெரில்லாக்களுக்கு பயிற்சியும் இடமும் பாகிஸ்தானில் வழங்கப்படுகின்றன என்பதை



ஜனாதிபதி மறுத்தார்.

ஆனால் கெரில்லாக்களுக்கு உதவியும் ஆயுதமும் வழங்கப்படும் சாத்தியத்தை ஜனாதிபதி நிராகரிக்கவில்லை.

### ராஜ்னீஷின் 93 கார்கள்

பஹ்ரன், நவ 26

அமெரிக்காவில் பகவான் ராஜ்னீஷ் விட்டு வந்த 93 ரோல்ஸ் ரோய்ஸ் கார்கள் விற்பனை செய்யப்பட உள்ளன.

இப்படி அவரது சீடர்கள் கூறினார்கள்.

### கொமேனிக்கு ஒரு வாரிசு

தெஹ்ரான், நவ 26

ஆயதுல்லா கொமேனியின் வாரிசாக 60 வயதான ஹோஸின் அலி மொன்ராசெறி தெரிவு செய்யப்பட்டார்.

கொமேனிக்குப் பின்னர் ஈரானின் ஸ்திரநிலை பாதிக்கப்படாமல் இருப்பதற்காக வாரிசு தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### மர்லின் பற்றி எழுத்தாளர்

ரோம், நவ. 23

ஹொலிவூட் கவர்ச்சி நடிகையான மர்லின் மொன்றோ இறப்பதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் தன்னைத் திருமணம் செய்து கொண்டார் என அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் கூறியுள்ளார்.

1962-ல் இந்த நடிகை தற்கொலை செய்து கொண்டார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த எழுத்தாளரான ரொபர்ட் ஸ்லேட்ஸர் "மர்லின் மொன்றோ தற்கொலை செய்யவில்லை. கொலை செய்யப்பட்டார். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உண்டு" என்றும் கூறியுள்ளார்.

'உதயன்' பத்திரிகைத்துறையில்
எடுத்துக்காட்டாக சிறப்புடன்
விளங்கி நீடூழி வாழ
வாழ்த்துகிறோம்!
★
சீமா சில்க்
இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
திருநெல்வேலி ---- யாழ்ப்பாணம்.
பொலியஸ்ரர், பருத்திப் புடைவைகள் தயாரிப்பில்
முன்னோடி உற்பத்தியாளர்கள்.

உதயனின்
உதயக் குரல் ஓசை
தினமும் ஒலிக்க
வாழ்த்துகின்றோம்



ஆசீர்வாதம்
ஸ்ரோர்ஸ்
61, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உதய நேரத்தில்
உதிக்கும்
'உதயன்'
நீடூழி வாழ
வாழ்த்துகிறோம்!
ANNA அண்ணா
3 கிலோ
2 கிலோ
1 கிலோ
500 கிறாம்
கோப்பிகளுக்கு வெகுமதியான பரிசுகளைப் பெறுங்கள்.
இச் சலுகை 1-12-85 முதல்
28-2-86 வரை மட்டுமே.
அண்ணா கோப்பிக் கடை
நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
அண்ணா தொழிலகம் - இணுவில்.

'உதயன்'
பத்திரிகை என்றென்றும்
சிறப்புற
எமது வாழ்த்துக்கள்
★
நியூ எஸ்.கே.
பிரிண்டிங் வேக்ஸ்
7, மின்சார நிலைய வீதி,
(2ஆம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.
அதி நவீன முறையில் பொலித்தீன்,
செலோப்பின், பிளாஸ்டிக் வகைகள்
அச்சிடுபவர்கள்.

ஈழ மண்ணில்
உதயனின் உதய கீதம்
ஒலிக்க
வாழ்த்துகிறோம்!
↓
ச.வி. முருகேசு
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22564

உதயன் வளர்ச்சிக்கு எமது
நல் வாழ்த்துக்கள்
★ புகைப்படம் கலர், கறுப்பு - வெள்ளை
★ புளக் தயாரிப்பு
★ வீடியோ படம் பதிவு
★ அடையாள அட்டை.
வட மாகாணத்தில் அதிசிறந்த நிறுவனம்
ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, மணிக்கூட்டு வீதி, T'. Phone. : 23067
யாழ்ப்பாணம்.
மறவாதீர்கள்:
ஹோட்டல் ஞானம்ஸ் T'. Phone: 22082

யாழ் நகரிலும் வெளிநாடுகளிலும் உங்கள் எதிர்காலத்துக்கு
தொழில்நுட்ப, மருத்துவ, கணக்கியல் ஆங்கில பாடநெறிகளுக்கு
(அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.)
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane, (opp. O.L.R. Church) Hospital Road,
JAFFNA. T' PHONE: 24355

### உதய சங்கற்பம்

நான் உண்மைக்காகவே வாழ்வேன்.
உண்மை ஒருபோதும் பொய்யுடன் சேராது. உலகம் முழுவதுமே என்னை எதிர்த்தாலும் இறுதியில் உண்மையே நிலைபெறும்.

- சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 16, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 27-11-85 தொலைபேசி: 24805 22073 த. பெ. 23


## சமர்ப்பணம்

மக்கள் சக்தி மகாசக்தி. அந்த மகாசக்திக்கு ஆற்றலும் அடித்தளமுமாக அமைவது எழுத்து. மக்கள் தம் சிந்தனையைப் பிரதிபலிப்பதும் எழுத்தே.

எழுத்தை — சிந்தனையை அரங்கேற்றும் மேடைகளில் முதன்மையானது பத்திரிகை. அதன் பேராற்றல் மகத்தானது.

பத்திரிகை மக்கள் பணிசெய்யும் மாட்சிமை மிக்கத் தொண்டன். ஜனநாயகத்தின் பாதுகாவலன். மக்கள் நாயகர்களை நேர்வழிப் படுத்தும் மதியூகம் மிக்க நல்ல அமைச்சன். மக்களுக்கும் அரசினருக்கும் இடையில் தொடர்பு உண்டாக்கும் விசுவாசத் தூதன். மக்கள் இன்னல்களைத் துடைக்கத் தன்னை அர்ப்பணிக்கும் கர்மவீரன். அநீதிகளைப் பேனா வாள் கொண்டு அரிந்து எறியும் தர்மவீரன். பின்வரப்போவதை முன்னரே கூறி எச்சரிக்கை செய்யும் தீர்க்கதரிசி.

பத்திரிகையின் பணியும் பொறுப்பும் பன்முகமானது. அதற்கென ஒரு தர்மம் உண்டு; பல நெறிகளும் உள்ளன.

உதயன் தனக்குள்ள பணிகளைத் தப்பாது செய்வான். தனக்குரிய பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவான். வாசகர்கள் தான் அவனின் அதிபதி. தமக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் களைந்தெறிய மக்களுக்குக் கை கொடுப்பான் உதயன். அவர் படும் இன்னல்களையும் துயரங்களையும் துடைப்பதற்குப் பக்கபலமாக இருப்பான்.

உதயனின் உயிர் மூச்சு உண்மை. உண்மையை—உள்ளதைச் சொல்வதற்கு அஞ்சாதிருப்பது அவனது அறநெறி. நடுநிலைமை அவனின் நேர்வழி. பத்திரிகா தர்மம் அவனது ஆன்ம நேயம்.

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் இன்றுள்ள நிலைதாண்டிமேலோங்கவேண்டும். எமது மண் அன்னைக்கு ஆபத்து வராது பாதுகாத்து அலளைச் சீராட்டிப் பாராட்ட வேண்டும். அவள் மடியில் உள்ள வளங்களைப் பெருக்கித் தமிழ் மக்கள் நல்வாழ்வு காணவேண்டும். அழிந்தொழியும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத் தமிழரின் கலை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாத்து மெருகூட்ட வேண்டும். எல்லாத் துறைகளிலும் புதுமைகள் புரியும் இதய வேட்கை தமிழ் மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

இதுவே உதயனின் பெரு விருப்பம். இதனை மக்கள் அடைவதற்கு உதயன் என்றென்றும் பக்கத்துணையாய் நிமிர்ந்து துணை நிற்பான்.

வாசகர்களின் கருத்துக்களை - நல்ல கருத்துக் கருவூலங்களை அரங்கேற்ற வசதி செய்து தரவும் உதயன் பின்நிற்க மாட்டான்.

நாளின் நாயகனாக இருந்து அன்றாட உலக, உள்நாட்டு,மாநில,மாவட்ட, உள்ளூர்ச் செய்திகளை வாசகர்களுக்குத் தருவதே உதயனின் பெருங் கடமை. அந்தக் கடமையைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் அவன் ஆற்றுவான் எனப் பிரதிக்ஞை செய்து இன்று படைக்கின்றோம். வாசகர் இதயக் கமலங்களின் காதலனாக - நாயகனாக உதயன் திகழ தமிழ்க்கடவுள் முருகன் பாதத்தில் வைத்துத் துதித்து உங்களின் முன் சமர்ப்பணம் செய்கின்றோம்.

வணக்கம்.

— ஆசிரியர்.

# உதயன்: பஞ்சகோணத்தில்

### சமயத்தில்

பண்டைத் தமிழர் சூரியனை முழுமுதற் கடவுளாகவும் கண்கண்ட தெய்வமாகவும் வழிபட்டனர். "எல்" என்ற சொல் சூரியனைக் குறிக்கும் எனவும் "எல்லம்" ஆகிய ஈழம் ஒளிப்பிழம்பு என்றும், அங்கு வாழ்ந்தவர்கள் சூரியனை வழிபட்டனர் என்றும் கூறுவர்.

இந்து மரபுப்படி இவ்வண்டம் முடிவில்லாதது, எண்ணிறந்த காலச் சக்கரங்களுக்கு ஊடாகச் செல்வது. கடவுள் காலத்தைக் கடந்ததும் காலத்துக்கு உட்பட்டதும் ஆவர். எனவே கட—உள், கடவுள் ஆகிற்று.

காலமாகிய ஒரு குறிய வட்டத்தைக் கற்பம் என்று அழைப்பர். ஒரு கற்பம் பிரமதேவனுக்கு ஒருநாள். அது மண்ணுலகத்தவரின் 432 கோடி ஆண்டுகளுக்கு ஒப்பானது. பிரமனின் இராப்பொழுதும் இத்தகைய நெடியதே. இவ்வாறு360 இரவு பகல்கள் பிரமனுக்கு ஓராண்டாகும். அவன் இப்படி நூறாண்டு ஆயுளைக் கொண்டவன்.

சூரியனோடு பல தெய்வங்களைத் தொடர்பு படுத்திய வேதகாலரிஷிகள் விண்ணிலே சூரியனாகவும் மண்ணிலே அக்கினியாகவும் இடையிலே மின்னலாகவும் மிளிர்பவன் அவன் என்று இயம்பினர்.

எரி உமிழ்ந்தேர் ஊர்ந்து வானத்துக்குக் குறுக்காகச் சென்றான் சூரியன் என்றனர். 'உலகில் வாழும் உயிரினத்திற்கு உணவூட்டினான்' உணர்வூட்டினான். உயிர்களையே தூண்டுடவனான் 'சவிதுரு'. பிராமணர்கள் மட்டுமல்லாமல் சைத்திரியர் வைசியரும் உட்பட எல்லா இந்துக்களுமே பொதுவாகப் போற்றும் காயத்திரி மந்திரம் "சவிதுர்" என்றே சூரியனை அறிவைத் தூண்டும்படி பணிக்கின்றது. 'உதய சூரியன்' ஞானபானுவாகி 'அறிவுச்சுடரெ'ன மிளிர்கின்றான்.

'பூஷன்' என்று பெயர் படைத்து இடையரையும் கட்டாக்காலிகளையும் காப்பாற்றுபவனாகின்றான்.

வேள்வித் தெய்வம் 'விட்டுணுவும்' சூரியனோடு தொடர்புடையோனாகின்றான். 'சூரிய நாராயணன் ஆகின்றான், மூவடி மண்ணளந்த வாமனனும் காலை, நடுப்பகல், மாலை என்று உலகை அளக்கும் சூரியனும் தொடர்பு படுத்தப்படுகின்றனர்.

சூரியனை வணங்கியவர்கள், முதலில் சூரியனையே வணங்கினர். பின் சூரியனின் சக்தியினை வணங்கினர். சூரியநமஸ்காரம் சந்தியா வந்தனம்,காயத்திரி உபாசனை அனைத்தும் ஒன்றியது.

சூரியனில் சிவனையே வணங்கினார்கள் சைவர்கள். சிவபூசை செய்வதன் முன் சூரியபூசை அத்தியாவசியமாகிறது. சிவபூசையில் முக்கிய அங்கம் சூரியபூசை.

'ஆதித்யஹ்ருதயம்' அகஸ்தியரால் இராமருக்கு உபதேசிக்கப்பட்டது. சூரியபகவானின் திருவடிகளைப் போற்றியே ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தி 'ராம-ராவண' யுத்தத்தில் வெற்றி பெற்றார். நித்யவாழ்க்கையில் வெற்றி பெற்றுச் சகல பாக்கியங்களையும் பெற பக்தர்கள் இதைத் தினமும் பாராயணம் செய்கின்றார்கள்.

அண்டம் அனைத்தும் இறைவனின் தோற்றம், அதனை விநாயக வடிவமாகக் கொள்ளும்போது விநாயகரது நாபி, பிரும்மாவாகவும் முகம் விஷ்ணுவாகவும், கண்கள் ருத்ரனாகவும் இடது பக்கம் 'சக்தி'யாகவும் வலது பக்கம் சூரியனாகவும்விளங்குகின்றன. எங்கள் சரீரம் அன்னமயகோசம் பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம், ஆகிய ஐந்து கோசங்களை உடையது. அன்னமயகோசம் எனப்படும் உணவால் வளரும் தூலசரீரத்துக்கு விஷ்ணு தேவதை ஆகிறார். பிராணமயகோசமாகிய மூச்சுக்கு சிவன் அதிபதி ஆகிறார். மனோமயகோசமாகிய மனதுக்கு சக்தி தலைவி ஆகிறாள். விஞ்ஞானமயகோசமாகிய அறிவுக்குச் சூரியன் அதிபதி ஆகிறார். ஆனந்தமய கோசமாகிய அமைதி, சந்தோசம், நிறைந்த சாந்தி நிலைக்கு விநாயகன் தெய்வமாகிறார்.

"பொன்மயமான பாத்திரம் சத்தியத்தின் முகத்தை மறைக்கிறது. அதனை நீ நீக்கிடுவாய்! இருளகற்றும் பாதுவே அறிவொளியைத் தூண்டுவாய்." இவ்வாறு நம்மை வழிநடத்தும் உதயனிடம் வேண்டி நிற்போமாக.

அஞ்ஞான இருள் நீக்கமே பிறப்புரிமை என்ற வேதவாக்கினை நினைவோமாக.

### தமிழர் வாழ்வில்

"கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகளியம்பின வியம்பின சங்கம் ஒவின தாரகை ஒளி ஒளி உதயத்தொருப்படுகின்றது—" திருப்பள்ளியெழுச்சியில் திருவாதவூரர் இப்படித்தான் பாடுகிறார்.

ஒளி ஒளிரும் உதய வேளை: காலைக்கதிரவன் கண்மலர்ந்து சிரித்தெழும் குழந்தை போல் கதிர்பரப்பி எழுந்து வருகிறான். அந்த அழகிய இளங்காலைப் பொழுதில் பூங்குயில் தன் தீங்குரலால் அமுத கானம் பொழிகிறது. கோழியும் குருகினங்களும் எழுந்து கூவிக்குரலெழுப்புகின்றன, சங்கொலிகள் கேட்கின்றன். ஒளி விளங்கும் அந்த உதய சூரியனின் பொன்வண்ணப் பொலிவில் உலகும் புதுப் பொலிவு பெறுகிறது.

மனித குலம் கதிரவன் வரவினால் பெறும் பயன்கள் எண்ணற்றவை, அதனால்தான் எல்லா இயக்கத்துக்கும் வாழ்வின் வளத்துக்கும் அதை முதன்மையாய்க் கொண்டனர் மக்கள்.

தமிழர் வாழ்வில் சூரியன் வாழ்வின் சாரத்தையே வாரி வழங்கும் வீரிய தேவனாய்ப் போற்றப்பட்டான். மனித குலம் நதிக்கரை நாகரிகம் கண்ட காலத்தில் தான் பயிர்ச்செய்கை விருத்தியடைந்தது. நதிக்கரை நிலத்தில் தனக்கு வேண்டிய உணவை உண்டு பண்ணி அதன் பயனில் வாழக் கற்றுக் கொள்கிறான் அப்பொழுதுதான்.

புலம் பெயர்ந்து இடம் மாறி காட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த அவன் 'பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட பழங்குடி' என்று சிறப்பித்துப் பேசப்படும் நிலைக்கு உயர்கிறான்,

நீரோடும் பேராற்றுக் கரைகளில் நிலைபெற்று அவன் வாழ்ந்த காரணத்தால் நனி நாகரிகனாய் தமிழன் உயர்ந்திருந்தான் அன்று. அதனால் அந்த வாழ்வினைப் புரந்த ஆறுகளை பண்டைப் புலவர் பெருமக்கள் 'பொய்யாக் குலக் கொடி'களாய்ப் போற்றினர்.

இப்படியோர் உயர்ந்த நிலைபெறுன வாழ்வு அமையும்போது கூடவே சிந்தனை வளமும் பெருகுகிறது. அந்தச் சிந்தனை தான் சூரியனைத் தனது வாழ்வின் முதல்வனாய்க் கொள்ளுமாறு தமிழனை எண்ணத் தூண்டியது. தனது கண்களால் காணக்கூடிய கண்கண்ட கடவுளாய் அவனைக் காணுமாறு வைத்தது.

காலை எழுந்தவுடன் கடன் முடித்து நீராடி அங்கு நின்றபடியே உதித்தெழும் சூரியனை தலைமேல் கரம் குவித்து வணங்குகிறான். நமது தலைமுறையில் இந்தப் பழக்கமும், வழிபடு நெறியும் இல்லாது போயிற்று. எனினும் இன்னும் நமது பாட்டன் பாட்டியர் அந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டு வருவதை ஆங்காங்கு நாம் காணமுடியும்.

தமிழன் தை முதல் நாளை தலைநாளாகக் கொள்கிறான். அந்த ஆண்டின் முதல் நாள் அவனால் வரவேற்கப்படுகிறது.

தனது கழனியில் விளைந்த செந்நெல் அரிசியில் அன்று புதுப் பொங்கல் செய்கிறான்.

வழமைபோல் அந்தப் பொங்கலை வீட்டினுள்ளே வைத்துச் சமைக்காமல் புனிதப் படுத்தப்பட்ட முன்றிலில் வைத்துப் பொங்குகிறான். கதிரவன் ஒளிச்சுடர் தவழ்ந்து வரும் போது பானையில் பாலும் பொங்குகிறது. புத்தரிசிப் பொங்கலை உதய சூரியனுக்கே படையலிட்டு அவனை வாழ்த்தி வணங்குகிறான்.

தனக்கு வாழ்வு தரும் அந்த அனுகூலமுடியா நெருப்புத் தேவனை நன்றியுணர்ச்சியோடு கொண்டாடும் மனப் பண்பு தமிழினத்தின் தலைப்பண்பாகும். அது உயர்ந்ததோர் ஒழுக்க நெறியுமாகக் கொள்ளப்படும். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்று வள்ளுவரும் வகைப்படுத்திப் பேசுவார். அந்த நன்றிக்குரிய நாயகனின் பெயர் தாங்கி வரும் நமது உதயனும் சமூகத்தின் நம்பிக்கை நாயகனாய் வருகிறான்.




அகர முதல எழுத்தெல்லாம்—ஆதி பகவன்முதற்றே உலகு.

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது

உதயனை ஐந்து கோணங்களில் நோக்கும் பஞ்ச கர்த்தாக்கள்:

1. ச. ஜெயச்சந்திரன் (சமயம்)
2. முத்து சிவலிங்கம் (தமிழர் வாழ்வு)
3. ஜெ. ஜெகன் (விஞ்ஞானம்)
4. ஜெ. சாரங்கன் (இலக்கியம்)
5. நவாலியூர் நா. சச்சிதானந்தன் (சோதிடம்)

### விஞ்ஞானத்தில்

சூரியனிடத்திருந்துதான் இந்தப் பூமி உருவெடுத்தது — உருக்கொண்டு உதயமாகியது. இதன் கதையோ பெரியது.

'நெப்யூலா' என்ற தீப்பிழம்பு போன்ற பிழம்பாகக் கொழுந்து விட்டெரிந்தது அன்று. பெரு நெருப்பாய் விண்வெளியில் நின்ற தீப்பிண்டம் அன்றொரு நாள் சிதறுண்டு அங்கெங்கும் பரந்தோடியது. பெருந்துண்டமாய் அண்டத்தில் நின்ற அனற்பந்து ஒன்று சிதைந்துபோன வற்றையும் சிதறிய துகள்களையும் கவர்ந்து தன்வசப்படுத்தியது. தன்நிலை மாறு சுழற்சியின் வேகத்தால் பேரனற் ஜோதியாய் விளங்கும் சூரியனாய் உருவாகியது பின்நாளில்.

தன் கவர்ச்சியாலும் சுழற்சியாலும் பிறிதோர் அனற் பிண்டமான பெருநட்சத்திரத்தை மையமாகக் கொண்டு இயங்குகிறான் சூரியன்.

தன்னிடத்திருந்து சிதறுண்ட சிறு துகள்களை, கிரகங்களாய்,(நாம் வாழும் பூமி உட்பட,) விண்கற்களாய் விளங்குவனவற்றைத் தன்னை மையமாகக் கொண்டு வலம்வரச் செய்துள்ளான்.

தனது குடும்பமென அதாவது சூரிய குடும்பமென எல்லாவற்றையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்து இயக்குகிறான்.

புதன், செவ்வாய், பூமி, சுக்கிரன், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் அனைத்தும் தன்னை வலம்வர வைத்த தலைவனாக நிற்கிறான். இப்படியோர் குடும்பத் தலைவனாகி நின்றிலங்கும் சூரியன் தன்னிலும் பெரியனான பிறிதொரு விண்மீனைக் குடும்பத்தோடு வலம் வருகிறான்.

அப்பெரிய விண்மீனோ ஏதோ ஒரு பொருளை மையமாகக் கொண்டு சூரியனையும் அதன் குடும்பத்தையும் அது போன்ற வேறு பல கிரகக் குடும்பங்களையும் இழுத்துக் கொண்டு எங்கோ சென்றுகொண்டிருக்கிறது.

தீப்பிழம்பாம் சிதறுண்ட 'நெப்யூலா'வின் சிதறுண்ட பெருந் திவலை சூரியனாகவும் சிறு திவலைகள் மற்றைய கிரகங்களாகவும் மாறிய விந்தையே விந்தை.

இவையெல்லாம் கால வெள்ளத்தில் உருண்டு வான வீதியில் பவனிவர, நெருப்பனலின் வெப்பம் தணிந்து குளிர்வுற, பவன மண்டலமும் குளிர்ந்து வர, 'கார் கோள் முகந்த கமஞ்சூல்

(4ம் பக்கம் பார்க்க)

### அபிமானி ஆராதனை

உலகத்தை இயங்க வைக்க எழுந்து வரும் உதயனென உலைத்துச் செய்தி எல்லாம் உள்ளபடி எடுத்துரைத்து நிலைகுலைந்த நற்றமிழின் நலம் நாடி நடுநிலை யாம்வழிச் சென்றே பல இருளின் மத்தியிலும் அஞ்சாது ஒளிதந்து நீ வாழ்க உதயனே நீ!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

### பிரார்த்தனை

இந்த மண்ணில் அவதரித்து இந்த மண்ணுக்காய் உழைத்து உயிர் நீத்த —

ஞானிகள்
மகான்கள்
தியாகிகள்
தலைவர்கள்

ஆகிய அனைவரின் ஆன்ம சாந்திக்கு உதயன் பிரார்த்திக்கின்றான்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## ஏழைஎளிய மக்கள்சேவையில் தெய்வீகத்தை தரிசிக்கமுடியும்

### சத்ய சாயி பாபா அருளுரை

பிரசாந்தி நிலையம், நவ. 26

சேவையில் ஈடுபடாதவன் வாழ்வு, கடவுள் இல்லாத கோயிலுக்குச் சமமாகும்.

மக்கள் கடவுளைத் தேடிக் காலத்தை விரயமாக்க வேண்டியது இல்லை. ஏழைகளுக்கும் கஷ்டப்படுபவர்களுக்கும் சேவை செய்வதில் அவர்கள் தெய்வீகத்தைக் காணமுடியும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா மேற்கண்டவாறு சொன்னார்.

பிரசாந்தி நிலையத்தில் உலக சத்யசாயி நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாட்டில் பகவான் பேசினார். அப்போது இக்கருத்தை வெளியிட்டார்.

சுமார் 12,000 பிரதிநிதிகள் உலகெங்கும் இருந்து வந்து இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

"மனித இனத்திற்குச் சேவை செய்வதன்மூலம், உலக சமாதானத்திற்கு வழி செய்யலாம். இந்த உணர்வை, உலக சாயி நிறுவனங்கள் ஏற்படுத்த முயலவேண்டும் என்றும் பகவான் பாபா மாநாட்டில் விண்ணப்பித்துக் கொண்டார்.

சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகியவை உலகில் நிலவினால் உலக சமுதாயத்தின் இடையே ஒருமைப்பாடு உருவாக முடியும் என்றும் பகவான் பாபா குறிப்பிட்டார்.

### இன்றைய நிகழ்ச்சிகள்

**அச்சுவேலி**

நாகர்கோவில், நவ 27

அச்சுவேலி ப. நோ. கூ. நங்க இயக்குநர் சபைத் தேர்தல் இன்று சங்கப் பணிமனையில் நடைபெறுகிறது.

இயக்குநர் சபைத் தேர்தலில் ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவர் திரு. எஸ். கமலநாதன் தலைமையிலான குழுவும் டாக்டர் எஸ். ராஜலிங்கம் தலைமையிலான குழுவும் போட்டியிடும்.

**புலோலி**

பருத்தித்துறை, நவ 27

புலோலி கமநல சேவை நிலையத்தில் கடன் வசதிகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று நடைபெறும்.

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கருத்தரங்குக்கு தலைமை வகிப்பார்.

கால்நடை விவசாயம், சட்டம் ஆகியவற்றுக்காக வழங்கப்படும் கடன் வசதிகள் பற்றி கருத்தரங்கில் ஆராயப்படும்.

**காவலூர்**

திருநெல்வேலி, நவ 27

மலையன் பனின்

"மாற்று" காலாண்டு இலக்கிய இதழ் அறிமுக விமர்சன விழா இன்று காவலூர் சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

காவலூர் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடக்கும் இந்த விழாவுக்கு ஆசிரியர் திரு. ஆ. சபாரத்தினம் தலைமை வகிப்பார்.

**இணுவில்**

கொக்குவில், நவ 27

"சத்திய சோதனை" என்னும் நாடகமும் "சத்திய சிந்தனை" என்னும் கவிதா நிகழ்வும் இன்று இணுவிலில் மேடை ஏறுகின்றன.

இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெறும்.

## யாழ்ப்பாண பகுதியில் 4,250 ஹெக்டர் நெற்செய்கை நாசம்

யாழ்ப்பாணம், நவ 27

அண்மையில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளம் காரணமாக யாழ்ப்பாணப் பகுதிகளில் 4,250 ஹெக்டரில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை முற்றாக நாசமடைந்தது.

அரசு அதிகாரிகள் எடுத்த பூர்வாங்க புள்ளி விவரங்களில் இருந்து இது தெரியவருகின்றது.

11,780 ஹெக்டரில் இம்முறை பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சாவகச்சேரி, நல்லூர், வேலணை, தொல்புரம், கீரிமலை, கைதடி, உடுவில் புத்தூர், புலோலி, அம்பன், புங்குடுதீவு, உரும்பராய் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை தான் சேதமடைந்தது.

221 ஹெக்டரில் வெங்காயச் செய்கையும் சேதமடைந்தது. 450 ஹெக்டரில் வெங்காயச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மரவள்ளிச் செய்கை 814 ஹெக்டரில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 386 ஹெக்டர் செய்கை நாசமானது.

வாழைச் செய்கை 321 ஹெடரில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 114 ஹெக்டர் செய்கைபாதிக்கப்பட்டது. 745 ஹெக்டரில் மரக்கறிச் செய்கையில் 305 ஹெக்டர் முற்றாகப் பாதிக்கப்பட்டது. மிளகாய்ச் செய்கை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆயினும் மிளகாய் நாற்று மேடைகள் அனைத்தும் வெள்ளத்தில் சேதமடைந்தன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலை இந்து மயான கொலை குறித்து நீதி விசாரணை வேண்டும்

### சுன்னாகம் பிரஜைகள் குழு தந்தி

சுன்னாகம் நவ. 27

திருமலை மயானத்தில் தகனக்கிரியைக்காக பிரேதத்துடன் சென்ற பொதுமக்களில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து சரியான நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் அவசரத் தந்தியை சுன்னாகம் பிரஜைகள் குழு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கும், திருகோணமலை அரசாங்க அதிபருக்கும் அனுப்பியுள்ளது.

இந்த அநாகரிகச் செயல் குறித்து எமது ஆழ்ந்த கண்டனங்களைத் தெரிவிக்கிறோம். அரச படைகளும் ஊர்காவல் படைகளும் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவதாக வெளியாகும் செய்திகளை இந்தச் சம்பவம் ஊர்ஜிதம் செய்வதுபோல அமைந்துள்ளது. உடனடியாக நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையான கொலைஞர்கள் மக்கள் முன் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு தந்தியில் கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீதான சித்திரவதைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தந்தியில் கோரப்பட்டுள்ளது.

சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான திரு.தி. மாணிக்கவாசகர் தந்தியை அனுப்பி உள்ளார்.

## நெல்லியடியில் கும்பாபிஷேகம்

பருத்தித்துறை, நவ. 27

நெல்லியடி முருகமூர்த்தி கோயில் வீதியில் அமைந்த விஷ்ணு ஆலய கும்பாபிஷேகம் இன்று 27ஆம் திகதி புதன் கிழமை காலை நடைபெறும்

சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் கும்பாபிஷேகம் செய்துவைப்பார்.

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள்,
1986ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள்,
டயறி வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
தந்தி: BOOKS தொலைபேசி: 23631

# உதயன்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி
வகுப்பு வரையிலான சகல
புத்தகங்களுக்கும்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
தந்தி: BOOKS தொலைபேசி: 23631

பௌத்த பிக்கு கடத்தல் எதிரொலி:

# சைவ மதகுரு உட்பட 15 பேர் பணயம்

## புல்லுமலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.27

இந்துமத குரு ஒருவர் உட்பட 15 தமிழ்ப் பயணிகள் பணயக் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏறாவூர் புல்லுமலைப் பகுதியில் வைத்து அவர்கள் கடத்தப்பட்டார்கள்.

ஏற்கனவே கடத்தப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்குப் பதிலாகவே இவர்கள் கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மினி வான்களில் வந்தவர்களே இக் கடத்தல் வேலையைச் செய்தனராம்.

இச்சம்பவத்தினால் மட்டக்களப்பிலும் ஏறாவூரிலும் பதற்றம் நிலவுகிறது.

கடந்த திங்களன்று அம்பாறை மகாஓயா மின்சாரத்திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு திரும்புகையில் பிரஸ்தாப பௌத்த பிக்குவும் அம்பாறை அரசாங்க அதிபர், சில அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோரும் கடத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் பௌத்த பிக்குவைத் தவிர ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த பௌத்த பிக்குவுக்கு பதிலாகவே 15 தமிழர்களும் நேற்றுக் கடத்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்த தமிழ்ப் பயணிகள் கடத்தப்பட்ட சமயம் மினிவான் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

புல்லுமலைப் பகுதியில் வைத்து அவர்கள் பயணம் செய்த மினிவான் மறிக்கப்பட்டது. அதிலிருந்த 19 பேரில் 15 பேரே கடத்திச் செல்லப் பட்டனர்.

"கடத்திச் செல்லப் பட்ட பௌத்த பிக்கு விடுவிக்கப்பட்டால் இவர்கள் விடுவிக்கப்படுவார்கள். பிக்கு கொலை செய்யப்பட்டால் இவர்களும் கொலை செய்யப் படுவார்கள்". இப்படிக் கடத்தல்காரர்கள் மினி வான் சாரதியிடம் கூறிச் சென்றனர் என்று தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் பற்றி ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

## பசுபிக் தீவுகள் நகர்கின்றன

டோக்கியோ,நவ.26

பசுபிக் தீவுகள், ஜப்பான் நோக்கி நகர்கின்றன.

ஆண்டு ஒன்றுக்கு 1 சென்டி மீட்டரில் இருந்து 8 சென்டி மீட்டர் வேகத்தில் இத்தீவுகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன என்று ஆய்வு ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஜப்பான், ஹவாய், அலபாமா முதலிய தீவுகளில் பொருத்தப் பட்டுள்ள அன்டெனாக்கள், ஆயிரம் கோடி ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ள நட்சத்திரம் ஒன்றில் இருந்து கிடைத்த சமிஞை அலைகளைக் கொண்டே பசுபிக் தீவுகள் நகர்ந்து கொண்டிருக்கும் விஷயம் வெளியானது.

## இளைஞனின் சடலத்தை சுமந்து மக்கள் ஆர்ப்பாட்டம்

சுன்னாகம், நவ 27

சுன்னாகம் சந்தியில் பிரேதத்துடன் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். இதனால் பெரும் பதற்றமும் -போக்குவரத்துத் தடையும் ஏற்பட்டன.

நேற்று நண்பகல் இச் சம்பவம் நடந்தது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

இனந்தெரியாத இளைஞர்கள் சிலரினால் திங்கட்கிழமை இரவு கொல்லப் பட்டதாகக் கருதப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக்காயங்களுடன் சுன்னாகத்திலுள்ள சந்தனவைரவர் கோவிலடியில் கிடந்தது.

சுன்னாகத்தைச் சேர்ந்த நடராஜா குமரேசன் என்ற 21 வயது இளைஞரே கொலையுண்டவர் என அடையாளம் காணப்பட்டார்.

கொலைக்கான காரணத்தை தெரிவிக்குமாறும் - இளைஞனை கொலை செய்தோர் உரிமைகோரி தம்மை மக்கள் முன் அம்பலப்படுத்துமாறும் கேட்டு மக்கள் பிரேதத்துடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

சுமார் இரண்டு மணி நேரம் சுன்னாகம் சந்தியில் பிரேதத்தை கிடத்தி விட்டு மறியல் செய்து போக்குவரத்துத் தடையை ஏற்படுத்தினர்.

பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று விசாரணை நடத்த பல விடுதலை இயக்கங்கள் முன்வந்துள்ளதாக கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விளையாட்டரங்கு

இரண்டாவது டெஸ்ட்

# ஆஸ்திரேலியா வெற்றி

## தோல்விக்குப் பின் கிடைத்த பரிசு

சிட்னி, நவ. 26

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா நான்கு விக்கெட்டுக்களினால் இன்று வெற்றி பெற்றது.

தொடர்ந்து மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் கிடைத்த படுதோல்விக்குப்பின்னர் ஆஸ்திரேலிய அணி இந்த ஆட்டத்தில் தான் தலை நிமிர்த்தியிருக்கிறது.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆஸ்திரேலியா படுதோல்வி அடைந்தது.

அதன் பின்னர் நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டிலும் ஆஸ்திரேலியாவுக்கு படுதோல்வி.

ஆஸ்திரேலியா மண்ணில் டெஸ்ட் ஆட்டங்களில் கன்றுக் குட்டி என கருதப்பட்ட நியூஸிலாந்து அணியிடம் ஆஸ்திரேலியா தோற்றுப் போனமை அதன் கிரிக்கெட் எதிர்காலத்திற்கு ஒரு கேள்விக் குறியாக அமைந்தது.

எனினும் இரண்டாவது டெஸ்ட்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற தன் மூலம் மீண்டும் தனது திறமையை அது ஓரளவு நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சிட்னியில் ஆரம்பமானது.

ஓட்ட விபரம்:- நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸ்—293 ஓட்டங்கள் (ஜே. ஜி. ரைட் 38, பி. ஏ. எட்கார் 50, ஐ. டி. எஸ். ஸ்மித் - 28, ஜே. ஜி. பிரேஸ்வெல் ஆட்டமிழக்காமல் 83, எஸ். எல். பூக் 37 ஓட்டங்கள் ஹொல்ண்ட் 106 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்)

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் — 227 ஓட்டங்கள் (டபிள்யூ. பி. பிலிப்ஸ் 31, அலன் போர்டர் 20, கிரெய்க் றிச்சி 89, கிரெய்க் மத்தியூஸ் 50 ஓ டொன்னல் 20 ஓட்டங்கள்.)

நியூஸிலாந்து இரண்டாவது இன்னிங்ஸ்—193 ஓட்டங்கள் (ஜே. ரைட் 43, பி. எட்கார் 52, ஆர். ஹாட்லி 26 ஓட்டங்கள் ஹொலண்ட் 68 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் பிரைட் 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்.)

ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸ்—6 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்கள் (வெயின்ஸ் பிலிப் 63, டேவிட் பூன் 81, டேவிட் குக்ஸ் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்கள்.)

நியூஸிலாந்து வீரரான ஜோன் பிரேஸ்வெல் இந்த ஆட்டத்தின் சிறப்பு வீரராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## உதயன்: பஞ்சகோணத்தில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மால்வரை வாள்போல் விசும்பில் வள்ளுறை சிதறி தலைப்பெயத் தலைஇய' கன்னி மழை பொழிந்தது. கடல் சூழக் கல் தோன்ற பூமி உதயமாகியது. உயிரினம் தோன்றியது' மண் தோன்றியது. மன்பதை தழைத் தோங்கியது. காலம் கடந்தது.

இவற்றுக்கெல்லாம் விண்வெளியில் வலம் வரும் ஒளிக்கோளங்களே உண்மையான காரணமென உணர்ந்தார்கள். தொடர்ந்து நம்பியும் வந்திருக்கிறார்கள். ஆய்ந்தாய்ந்து அறுதியிட்டு உறுதி கூறினார்கள்,

### இலக்கியத்தில்

மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம். எனவே மக்கள் சமுதாயத்தின் வாழ்வில் பல்வேறு துறைகளிலே பங்களிப்புச் செய்யும் சூரியன், இலக்கியத்தில் முதன்மை பெற்றமை மிகையன்று.

முருகப் பெருமான் மயிலிலே தோன்றும் அருங் காட்சியைக் கண்ட நக்கீரருக்கு உள்ளத்தே ஏற்பட்ட கிளர்ச்சி என்ன தெரியுமா? செந்நிறக் கதிர் பரப்பும் உதயன் நீலக் கடலிலே உதிக்கும். காலைக் காட்சி புலவர் நினைவில் தோன்றுகிறது. அதுவே திருமுருகாற்றுப்படை இலக்கியத்தின் முதலடி ஆகிவிடுகிறது.

உதயன் காலையில் உதிப்பதைக் கண்டு உலகம் மகிழ்வதாக, உவப்பதாக அவர் பாடுகிறார்.

"உலகம் உவப்ப
வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு
கடற்கண்டாங்கு"

உதயனைப் "பலர் புகழ் ஞாயிறு" என்று நக்கீரர் புகழக் காணகின்றோம்.

மணிவாசகர் பாடிய "திருப்பள்ளி எழுச்சி" பதிகத்தில் உதயன் தோன்றும் காட்சி சித்திரிக்கப்படுகிறது. உதயத்தின்போது குயில்கள், கோழிகள் கூவுகின்றன. ஏனைய பறவைகள் குரலெழுப்புகின்றன. விண்வெளி நட்சத்திர ஒளி குன்ற, உதயன் ஒளி அழகாக பெருக்கெடுக்கிறது.

"கூவின பூங்குயில்
கூவின கோழி
குருகுகள் இயம்பின
இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி
ஒளி உதயத்
தொருப்படு கின்றது
விருப்பொடு நமக்கு"

மக்கள் எழுச்சி, வளர்ச்சி, மகிழ்ச்சியைக் குறிக்கும் போதெல்லாம் தமிழ்ப் புலவோர் கதிரவனைப் பாடத் தவறுவதில்லை. தைப் பொங்கல் பற்றிய பாடல்களில் எல்லாம் தனக்கெனஓர் இடம் பிடித்தவர் சூரியப் பெருமான் அன்றோ.

### சோதிடத்தில்

ஜோதிஷ சாஸ்திரத்தின் அடிப்படை கிரக மண்டலமாகும். இக்கிரக மண்டலத்தில் முதன்மை பெறுவது சூரியன். பல கோடி மைல்களுக்கு அப்பால் இருந்தும் அதன் கதிர்கள் பூமியை வந்தடையும் பொழுது எத்தகைய ஒளியையும் உஷ்ணத்தையும் அளிக்கின்றன என்பது நாம் நாளாந்தம் காணும் ஒருசம்பவமாகும் அப்படியாயின் சூரிய மண்டலத்தை நாம் அண்மிக்கவே முடியுமா? அத்தகைய உஷ்ணமும் ஒளியும் பொருந்திய சூரியனைக் கிரக மண்டலத்தில் முதன்மை பெறும் கிரகமாகக் கணித்தனர் எமது முன்னோர்.

பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள நெருங்கியதொடர்பினை நவீனவிஞ்ஞானிகள் அறிய முன்பு 'இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தஎமதுமுன்னோரான மொகன்ஜாதாரோ மக்கள் அறிந்து கொண்டார்கள்என்பதை நோக்கும் பொழுது நாம் பெருமைப் படுகிறோம்.

"Proto — Indo — Mediterranean Culture" என்னும்நூலில் ஹேராஸ் பாதிரியார் இவ்வுண்மையை வெளிப்படுத்துகிறார். அக்காலத்து மக்கள் இன்றைய விஞ்ஞான உபகரணங்களான தொலை நோக்கிகள், செயற்கைக் கிரகங்கள் போன்றவற்றின் துணையெதுவுமில்லாமல், தமதுகாலத்தில் தமக்கென ஏதோ ஒரு முறையைக் கையாண்டு எத்தகைய நுண்ணிய உண்மைகளைக் கண்டறிந்தார்கள் என எண்ணும் போது வியப்பேற்படுகிறது.

அவர்கள் பூமியின் சுழற்சியையும் சூரியனின் தொடர்பினையும் கணக்கிட்டு ஒரு வருடத்தை 45 நாட்கள் கொண்ட எட்டு மண்டலகாலமாகப் பிரித்தனர். இதன்படி ஒரு வருடம் 360 நாட்களைக் கொண்டதெனக் கணக்கிட்டனர்.

இந்தப்பகுப்புக்குக்காரணம் சூரியன் ஒவ்வொரு இராசியிலும் 45நாட்கள் சஞ்சரிக்கிறதென அவர்கள் கணித்தமையாகும். இந்த அடிப்படையைக் கொண்டே பண்டைய வைத்தியர்கள் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கும்பொழுது ஒருமண்டல காலத்துக்கு அதாவது 45 நாட்களுக்கென அளவிட்டுக் கொடுத்து வந்தனர். இதே போன்று எமது ஆலயங்களில் கும்பாபிஷேகத்தின் பின் மண்டலாபிஷேகம் என 45 நாட்களுக்கு அபிஷேகம்செய்து ஈற்றில் சங்காபிஷேகத்துடன் அதைப் பூர்த்தி செய்கின்றனர்.

காலப்போக்கில் சுமேரிய நாகரீகம் மத்திய ஆசியாவில் பரவிய காலத்தில் கிரக மண்டலம் 12 இராசிகளைக் கொண்டதாக கணக்கிடப்பட்டது. இங்கும் சூரியன் ஒவ்வொரு இராசியிலும்ஏறத்தாழ30 நாட்கள் சஞ்சரிப்பதாகக் கொள்ளப்பட்டேஇன்றும் எமது வாழ்க்கையில் பல்வேறு விடயங்களுக்கும் சூரியனை முதன்மையாகக் கொண்டு கருமமாற்றுகிறோம்.

எமது முக்கிய பண்டிகைகளான "தைப்பொங்கல்", வருடப் பிறப்பு" ஆகியன இரண்டும் சூரியன், முறையே மகர இராசி, மேட இராசி ஆகியவற்றிற் பிரவேசிக்கும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டே கொண்டாடப் படுகின்றன.

இதுஇவ்வாறிருக்கஜோதிஷ சாஸ்திரத்திற் சூரியனை "பாஸ்கரன்" (Bhaskaran) என்றுதான் அழைப்பார்கள். பூமியிலுள்ள எமக்குச் சூரியனின் கதிர்கள் ஒரு பகுதிக் காலத்துக்கு வெளிப்படையாகத் தெரிகின்றன, இன்னொரு பகுதிநேரத்துக்குத் தெரியாது போகின்றன. அப்படிச் சூரியனின் கதிர்கள் எமக்குத் தோன்றத் தொடங்கும் காலத்தையே நாம் "உதயம்" என்கின்றோம் ஒளியை அளிப்பதன் காரணமாகச் சூரியனை "உதயன்" எனவும் அழைக்கின்றோம்.

ஒருவர் பிறக்கும் நேரத்தில் சூரியன் எந்த இராசியில்அமைந்திருக்கிறதோ அதைக் கொண்டே அவரது வாழ்வின் முக்கிய சிறப்புக்களைக் கணிப்பார்கள். முக்கியமாக, மேட இராசியில் சூரியன் உச்ச பலத்தை அடைவதாகக் கணித்துள்ளார்கள்

குறிப்பாக மேடஇராசி பத்தாம் இடமாக, அதிற் சூரியன் உச்சம்பெற்றிருக்கக் கூடிய அமைப்புள்ள ஒருவர் வாழ்க்கையில் ஏதோ ஒரு நல்லதுறையில் பிரபல்யம் பெறும் நிலை ஏற்படும். மற்றைய கிரகங்களின் நிலைகள் அனுசரணையாக இருப்பின் மிகச் சிறந்த அரசியல் தலைவனாக மிளிரும் நிலையும் ஏற்படும். அவ்வாறான சூரியன் வேறு கிரகங்களின் பக்க பலம் சரிவர ஏற்படாத பட்சத்தில் அச்சாதகருக்குக் குறைந்தபட்சம் அரசாங்கத் துறையில் ஈடுபாடு அல்லது தொழில் அரசியல் தலைவர்களுடன் தொடர்பு என்பன ஏற்படும்.

வாக்குஸ்தானமான இரண்டாமிடத்துடன் தொடர்பு பெற்றுச் சூரியன் நன்னிலையில் இருக்கும் ஜாதகர் சிறந்த பேச்சாளராக இருப்பது மாத்திரமன்றி அவரது பேச்சுக்கள் மக்களைக் கவரும் வகையில் அமையும். சூரியன் நன்கு அமையப் பெற்ற ஜாதகர்கள் மற்றவர்களால் முக்கியஸ்தர்களாகக் கவனிக்கப்படுவார்கள். சோம்பலின்றிச் செயலாற்றும் ஆற்றலும் இத்தகையோருக்கு உண்டு.

### உதயனும்...

இனர்கள்.

சமய ரீதியில் மட்டுமன்றி தமிழர் வாழ்விலும் சூரியனுக்கு முதலிடம் தரப்பட்டது.

(ஐந்து எழுத்தாளர்கள் உதயனை பஞ்சகோணத்தில் நோக்குவதை 3 ஆம் பக்கத்தில் படியுங்கள்)

சூரியனுக்கு உள்ள அத்துணை முக்கியத்துவத்தை உணர்ந்தே உங்களது உள்ளம் கவரவரும் நாளிதழுக்கு "உதயன்" என்று பெயர் சூட்டினோம்.

வைகறையைக் கலக்க உதயன் உதித்து எழுந்ததும் பூவுலகெங்கும் மகிழ்ச்சி பொங்கிப் பிரவகிப்பதுண்டு. அதே போன்று உதயன் நாளிதழ் உங்கள் கைக்குக் கிடைத்ததும் உங்கள் உள்ளக் கமலம் மலர வேண்டும் என்பது எமது வேணவா. வதந்திகள் உண்மையற்ற பிரசாரங்கள் மலிந்த இக்காலத்தில் உண்மையான செய்தி எனும் ஒளி தந்து உதவுவான் உதயன். அவனுக்கு உங்கள் நல்லாசியையும், நல்லாதரவையும் தாருங்கள்.

உதயனுக்கு முன்னால் இருக்கும் அவனது இலச்சினையைப் பாருங்கள்.

நவீன தொடர்பு சாதனங்கள் வருவதற்கு முன்னர் இடத்துக்கு இடம் செய்தி அல்லது தூது கொண்டு செல்லும் முறைகள் பலவிதமாக இருந்தன.

புறா, அன்னம் போன்ற பறவைகள் மூலம் காதலர்களும், அரசர்களும் செய்தி அனுப்பியதாகச் சங்க கால இலக்கியங்கள் கூறும். அதற்கு முந்திய காலத்தில், வீரர்கள் கணை தொடுத்தே செய்திகளைத் தூர இடங்களுக்கு அனுப்பினார்களாம். ஆனால் இன்று முதல்...

உதயன் செய்திக் கணை தொடுப்பான். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல வேகமாகச் செய்தி தருவான் என்பதையே இலச்சினை குறிக்கிறது. செய்தி எழுதும் பேனாவை அம்பாகவும், அதன் வாயில் செய்தி எழுதப்பட்ட காகிதம் இருப்பதாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. சூரியனிலிருந்து புறப்படும் ஒளிக்கதிர்களின் வேகத்துடன் வாசகர்களுக்குச் செய்தியைக் கொடுக்க வேண்டும் என்பது அதன் உள்ளார்ந்த கருத்து.

முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்களில் ஒருவரின் அரசகொடி விற்கொடி. செய்தியை வேகத்தோடு தருவதைச் சித்திரிக்கும் போது தமிழ் அரசன் ஒருவனின் கொடியையும் சிறப்பித்ததாக விளங்கும் என்பதாலேயே வில்லையும், அம்பையும் தெரிவு செய்தோம். தமிழரின் சரித்திரச் சின்னத்தைப் பெருமை படுத்தியதாகவும் இது அமையும்.

## விஷ்ணு மோகன் தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 27

ஆசிய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் இலங்கை அணிக்கு விஷ்ணுமோகன் தலைமை வகிக்கின்றார்.

இச் சுற்றுப்போட்டி கோலாலம்பூரில் எதிர் வரும் டிசம்பர் 28 முதல் ஜனவரி 5 வரை நடைபெறவிருக்கிறது.

உதய நேரத்தில்
உதிக்கும் "உதயன்"
உயர் வழி காட்டுவான்!
மில்க்வைற் நீல சோப்
சம்பூரண சலவைக்கு
மில்க்வைற் நீல சோப்பை வாங்கி
உபயோகியுங்கள்.
உங்கள் அபிமானத்திற்குரிய
மில்க்வைற் நீல சோப்




புதிய விலை ரூபா 2/- மட்டுமே.
நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீல சோப்பை வாங்கிப் பாவித்து
மேலுறைகளை அனுப்பி மிகச் சிறந்த
பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
100 மேலுறைகளுக்கு ஒரு அழகிய கைலேஞ்சி.
மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.
த.பெ. இல: 77 தொலைபேசி: 23233

வியாழ, சனி
மாற்றம்
உங்களுக்கு
எப்படி?
ரூபா இரண்டு
மட்டுமே.
விற்பனையாகிறது.
சோதிடர்
ஆ. சிவராசா,
வேலணை.

வாழ்க, வாழ்க, நீடு வாழ்க!
மக்கள் சேவை நலமே புரிந்து
நீடு வாழ்க!
புதினத் துறையில் புதுமை புரிந்து
உண்மை சொல்லி உயர்ந்து வாழ்க!!
*
WHITEFIELD INDUSTRIES
COLOMBO • CHANKANAI.

"உதயனே" வருக!
இதயம் எல்லாம்
இனித்திட எழுக!!
குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
42, 44, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23034

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த - ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 27 - 11 - 1985.